3. அடிக்குறிப்புகள்

[1] பாரதியார் பாரதியார் கவிதைகள் பக்.249.
[2] மேலது பாரதியார் கவிதைகள பக்.125.
[3] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க, பக்.13.
[4] மா.இராமலிங்கம், 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் பக்.55.
[5] மணிமேகலை புலியூர் கேசிகன் பாத்திரம் பெற்ற காதை பா.எண்.9.
[6] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.30.
[7] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.36.
[8] திருவள்ளுவர் திருக்குறள் குறள்.666.
[9] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக். 42-43.
[10] மேலது பக். 45.
[11] திருவள்ளுவர் திருக்குறள், குறள்.110.
[12] வெ.இறையன்பு ஓடும் நதியின் ஓசை பக்.147.
[13] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க பக்.96.
[14] து.அரங்கன்(உரை) நாலடியார் பக்.13.
[15] நாஞ்சில் நாடன் சூடிய பூ சூடற்க, பக்.142.

4. துணைநூற்பட்டியல்

[1] நாஞ்சில் நாடன் - சூடிய பூ சூடற்க பாவை பிரிண்டர்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு - ஜனவரி-2011.
[2] அரங்க சுப்பையா - இலக்கியத்திறனாய்வு பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதிப்பு - 2007.
[3] இராமலிங்கம், மா., - இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.
[4] இறையன்பு, வெ., - ஓடும் நதியின் ஓசை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை - 600 098. நான்காம் பதிப்பு, ஆகஸ்ட் - 2009.
[5] திருவள்ளுவர் - திருக்குறள் சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை, இரண்டாம்
[6] பதிப்பு, நவம்பர் 2004.
[7] புலியூர்க் கேசிகன் - மணிமேகலை பாரி நிலையம், சென்னை. மறுபதிப்பு -2009
[8] பாரதியார் - பாரதியார் கவிதைகள் மணிவாசகர் பதிப்பகம் சென்னை, செம்பதிப்பு – 1997.






# அளம் காட்டும் பெண்களின் புறஉணர்வுப் பதிவுகள்


**செ. லிட்டில் ப்ளவர்**

*தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),*
*பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.*


## 1. முன்னுரை

பெண்ணைக் குறைத்து மதிப்பிடும் தவறான போக்கு இன்னும் நீடித்துக் கொண்டு தான் இருக்கின்றது. காலங்காலமாகப் பெண்களின் உணர்வுகள் நசுக்கப்பட்டு விலை போய்க்கொண்டிருக்கின்றன. சுயசிந்தனையும், தன்னம்பிக்கையும் அற்றவளாகவே இச்சமூகம் பெண்ணைப் பார்த்து வருகின்றது. இவ்வாறு சமுதாயத்தால், ஆண்களால் பெண்களின் புறஉணர்வுகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

## 2. பெண்ணியம்

பெண்ணின் இருள் சூழ்ந்த விளிம்புநிலை வாழ்க்கையை வெளிச்சத்திற்குக் கொண்டுவரப் பெண்ணியம் அவசியமாகிறது. பெண்ணியம் என்பது பெண் விடுதலையை மையப்படுத்திப் பல்வேறு நாடுகளில், பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு தளங்களில் போரிட்ட இயக்கத்தின் சித்தாந்த வெளிப்பாடு ஆகும்.

"பெண்ணியம் என்பதற்குப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் தரும் ஒட்டு மொத்தமான விளக்கங்களாவன:

- பாலியல் சமத்துவம்
- பெண் சகஉயிரி
- ஆணுக்கு நிகரானவள்
- எந்நிலையிலும் எக்காலத்திலும் அவள் அடக்கி வைக்கப்படக் கூடியவள் அல்ல.
- பெண் குடும்பங்களிலும் சரி, அலுவலகங்களிலும் சரி, சமூகப்பிரச்சனைகளிலும் சரி, நசுக்கி ஒடுக்கி வைக்கப்படுகின்றாள். அதிலிருந்து மீள்வதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்"[1]

ஆகியவையாகும்.

## 3. பெண் எழுத்து

பெண் எழுத்து என்பது பெண்களை மையமிட்ட எழுத்து என்று தான் தொடக்கத்தில் உணரப்பட்டது. பின்னர் பெண் படைப்பாளிகளின் எழுத்துக்கள் பெண் எழுத்து என்று உணரப்பட்டது. சிறிது காலம் சென்று பெண்கள் எழுதும் எழுத்துக்கள்

எல்லாம் பெண் எழுத்து ஆகிவிடாது என்று உணரப்பட்டது. "பெண் தன்னைப் பெண்ணாக உணர்ந்து கொண்டு அறிந்து கொண்டு தமக்கான பிரச்சனைகளைத் தம் சூழலில் எடுத்துரைப்பதே பெண் எழுத்து என்று உணரப்பட்டுள்ளது."[2]

பெண்களின் படைப்புகளில் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட பலவகை அனுபங்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பெண்களின் புதினங்களில் வெளிப்படுத்தப்படும் விஷயங்கள் ஆண்களின் படைப்புகளிலிருந்து வேறுபட்டு முற்றிலும் சுயத்தன்மை உடையவனாக, உண்மைத்தன்மை உடையனவாக விளங்குகின்றன.

## 4. அளத்தில் பெண்களின் புறஉலகப்பதிவுகள்

சமுதாய அமைப்பில் ஆண்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்களாகவே கருதப்படும் நிலையுள்ளது. பெண்கள் வாழ்வில் பல்வேறு நிலைகளில் இடர்ப்பாடுகள் நேர்ந்து வருவதை நாம் அறிய முடிகின்றது. கல்வி, காதல், உரிமையின்மை, திருமண ஏற்பாட்டில் இடர்ப்பாடுகள், வரதட்சணைச் சிக்கல், பெண்கற்பு வலியுறுத்தப்படுதல், மணவாழ்க்கை இடர்ப்பாடுகள், விதவைநிலை முதலான சிக்கல்கள் பெண்களுக்கு நேரிடுகின்றன. இவ்வாறு பெண்களுக்கு ஏற்படும் புற உலகம் சார்ந்த சிக்கல்களை அளத்தில் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி எவ்வாறு எடுத்தியம்புகின்றார் என்பதைப் பார்ப்போம்.

### 4.1. அளம்

'அளம்' என்ற புதினத்தின் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி திருவாரூர் மாவட்டம் கற்பகநாதர்குளம் என்னும் சிற்றூரில் 1971ல் பிறந்தவர். இவர் தன் இலக்கியப் படைப்புகளுக்காகத் 'தமிழ் வளர்ச்சித்துறை விருது', 'கலைஞர் பொற்கிழி விருது, 'தமிழக அரசு விருது' எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

தமிழ் நாவல்களிலே அதிகம் பதிவு செய்யப்படாத பெண் உழைப்பை அழுத்தமாக விவரித்திருக்கும் புதினமாக அளம் காட்சி தருகிறது.

'அளம்' என்னும் புதினத்தில் மூன்று பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு கணவனின் துணையின்றி தனியாக வாழ்வில் போராடும் சுந்தராம்பாளையும், அவளது மூன்று மகள்களையும் சுற்றியே கதை அமைக்கப்பட்டிருக்கின்றது.

### 4.2. திருமண வாழ்வில் பெண்

ஒரு பாதி ஆணும் மற்றொரு பாதி பெண்ணும் ஒன்றுபடுவதே திருமணமாகும். திருமணம் வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வருகின்ற இரண்டு உயிர் ஒன்றி முழுமை பெற்று கடனாற்றுவதற்கு அன்புக் கயிற்றால் பிணிப்பது தான் திருமணம் ஆகும்.





திருமணம் என்பது பெண்ணிற்குப் பெரியதொரு சமூகப் பாதுகாப்பு. இந்தப் பாதுகாப்பு தந்து, பெண் மக்களை ஏற்றுக் கொள்ளுமாறு பெற்றோர்கள் வேண்டும் நிலை அன்று முதல் இன்று வரை உள்ளது. பெண்ணாகப் பிறந்தாலே அவள் என்றாவது ஒரு நாள் வேறொரு வீட்டிற்கு மருமகளாகப் போக வேண்டும். அவ்வாறு போகாவிட்டால் இவ்வுலகமும், அவள் வாழும் சமூகமும் அவளைத் தூற்றும்.

அளத்தில் வரும் வடிவாம்பாளின் நிலையும் இதுதான். வடிவாம்பாளின் வயதுள்ள பெண்களுக்கும், இவளை விட வயது குறைந்த பெண்களுக்கும் திருமணம் நடைபெற்றது. ஆனால் இவளுக்கு மட்டும் திருமணம் நடக்கவில்லை. வடிவாம்பாளைப் பெண் பார்க்க வந்தவர்கள் கூட அவளை நேரில் பார்த்தவுடன் கருப்பு நிறத்தைக் காரணம் காட்டி பிடிக்கவில்லை என்றார்கள்.

"பெரியப்பா என்னவிடக் கருப்பாயிருக்கிற சம்பந்தமாயிருந்தா அழச்சிக்கிட்டுவாங்க இல்லன்னா வுட்டுருங்க. நா இப்படியே இருந்திட்டுப் போறங்"[3] என்று வடிவாம்மாள் மனம் வெறுத்துக் கூறுகின்றாள். முடிவில் இவளுக்கு தன் அப்பா வயதுள்ள பொன்னையனைத் திருமணம் செய்து வைக்கின்றார்கள்.

இங்கே இச்சமூகம் பெண்ணின் மனதைப் பார்க்காமல் அதாவது அவளது அகத்தைப் பார்க்காமல் புறத்தை மட்டும் பார்த்து முடிவு செய்கின்றது என்பதை நாம் அறிய முடிகின்றது.

### 4.3. காதல் வாழ்வில் பெண்

மானுட வாழ்வில் மிக முக்கியமான பங்கு காதலுக்குண்டு. காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்பது ஔவையின் அமுதமொழியாகும். பருவ வயது வந்த ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இடையே மலரும் அன்பானது காதல் என்று கருதப்படுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட பாலுறவு விருப்பால் விளைவதே காதல். ஆனால் பாலுறவுக்கு அப்பாற்பட்ட காதலும் இச்சமூகத்தில் உண்டு.

இக்காதல் வாழ்வில் பெண்கள் பலபிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். இப்புதினத்தில் வடிவாம்பாளின் தங்கை அஞ்சம்மாளும் பூச்சியும் காதலிக்கின்றனர். பூச்சி தன் அம்மாவிடம் "நல்ல பொண்ணு, ஒழுப்பாளியாருக்கு, உள்ளூராவுமிருக்கு, அதக் கட்டுனா நம்ம குடும்பத்துக்கு நல்லது தாம்மா"[4] என்று கூற அவன் அம்மா இதற்குச் சம்மதிக்கவில்லை. மாறாக எல்லோரிடமும் அஞ்சம்மாளையும், அவளின் அம்மா, அக்காள்களையும் இழித்தும் பழித்தும் பேச ஆரம்பிக்கின்றாள். இங்கே இருவரும் தான் காதலித்தார்கள். ஆனால் ஆணின் அம்மா பெண்ணின் குடும்பத்தைக் கேவலப்படுத்துவது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. அப்பெண்ணும், அவளது குடும்பமும் தான் இப்பழியை ஏற்கின்றனர். ஊரும், உலகமும் இவர்களைத் தான் ஏசுகின்றது. எந்த நிலையிலும் காதலினால் பிரச்சனைகளை, அவமானங்களை அடைவது பெண்கள் தான் என்பதை புதினம் உணர்த்துகிறது.

### 4.4. குடும்ப வாழ்வில் பெண்

குடும்பக்கட்டுக்கோப்பைக் காப்பாற்றுவதில் குடும்ப மாந்தர்கள் அனைவருக்கும் பொறுப்பு உண்டெனினும் கணவன் மனைவிக்கே தலையாய பொறுப்பு உண்டு. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவே கணவன் மனைவிக்கும் இடையே உள்ள உறவாக இருக்க வேண்டும்.

வடிவாம்பாளின் தங்கை ராசாம்பாளின் கணவன் வேதப்பன் திருமணம் முடிந்து சில ஆண்டுகள் ஆனபின்பு "ஒன்னப் பாத்தா சாவாடு செத்தமேரிருக்கு ராசாம்பா, ஓங்கையி காலுல ரெத்தமே ஓடலபொலருக்கு. ஒம்மொவத்த பாத்தா சவத்தபாக்குற மேரிருக்கு"[5] என்று கூறியது மட்டுமில்லாமல் வேறொரு பெண்ணை திருமணம் முடிக்கின்றான். இவ்வாறு எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் கட்டத்திலும் பெண்தான் அன்பு செய்யக் கூடியவர்கள் மூலம் புறக்கணிக்கப்படுகின்றாள்.

### 4.5. புகுந்த வீட்டில் பெண்

திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்கு சென்ற பின் அங்கே ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ள பெண் எண்ணுகிறாள். கணவன் தன்மீது அன்புடன் நடந்து கொண்டாலும் வீட்டில் உள்ள மற்றவர்களால் சிக்கல்களுக்கு உள்ளாகிறாள்.

பொன்னையன் நெஞ்சில் தேங்காய் விழுந்ததால் அவன் படுத்த படுக்கையாகி விட்டான். தம்பி எப்பொழுது சாவான், சொத்து எப்போது வரும் என்று மூன்று தங்கைகளும் எதிர்பார்த்திருந்தனர். பொன்னையன் இறந்த பின் மூவரும் வடிவாம்பாளை வீட்டை விட்டு விரட்டுகின்றார்கள். தன் தம்பி பொண்டாட்டி என்ற உணர்வு கூட இல்லாதவர்களாய் இருந்தனர். இவள் எவ்வளவோ சொல்லியும், அழுதும் பார்த்தாள் எந்தப் பயனும் இல்லை.முடிவில் விதவையாய் தன் தாய்வீட்டில் வாழ்ந்தாள்.

ஒரு பெண்ணிற்கு அவள் புகுந்த வீட்டில் கணவனின் துணை தேவை. அவன் இறந்த பிறகு மாமியார் - மாமனார் துணை தேவை. அவர்களும் இல்லாத போது நாத்தனார்களின் துணை வேண்டும். அவர்களும் அப்பெண்ணிற்கு ஆதரவாய் இல்லையென்றால் அப்பெண்ணின் நிலை மிகவும் மோசமானதாகும். இத்தகு நிலையில் கல்விதான் அவளைக் காப்பாற்றும் என்ற நிலையை இந்த நாவலில் சு.தமிழ்ச்செல்வி சுட்டியிருக்கலாம். ஆனால் நாவலின் களம் அதற்கு இடங்கொடுக்கவில்லை போல.

## 5. பெண் மறுமணம்

இளம்பெண்கள் விதவையாக வாழ்ந்தால் பாதுகாப்பு இல்லாமல் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். சமூக ஒழுக்கக் கேடு வலிந்து திணிக்கப்படுகின்றது. மனைவி இறந்த பின் வேறுதுணையைத் தேடும் ஆண்களைப் போல் கணவன் இறந்த



JAC JOURNAL OF SCIENCE, HUMANITIES AND MANAGEMENT

பின்னர் வேறு துணையை நாடும் உரிமை பெண்களுக்கு வேண்டும் என்று குரல் கொடுத்தான் பாரதி.

வடிவாம்பாளின் கணவன் பொன்னையன் இறந்தபின் இவளுக்கு மறுமணம் செய்து வைக்க முடிவெடுக்கிறார்கள். வடிவாம்பாளின் சம்மதம் இல்லாமலே வலிப்பு நோயுள்ள முத்துச்சாமியை திருமணம் செய்து வைக்கிறார்கள்.. கணவனை இழந்த பெண்ணுக்கு சமூகத்தில் இரண்டாவது திருமணம் செய்யும் போது நோயாளியையோ, வயதில் முதிர்ந்தவனையோ, அல்லது மனைவியை இழந்தவனையயோ தான் திருமணம் செய்து வைக்கிறார்கள். அந்த அளவிற்கு இரண்டாந்தரத்திற்குக் கீழ்த்தள்ளப்படுகிறாள் என்ற சமூக அவலமும் இதனால் சித்திரிக்கப்படுகிறது.

## 6. முடிவுரை

குடும்பத்தைச் சிந்தாமல் சிதறாமல் கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கு மட்டும் உரியதாகி விட்டது. இத்தகைய பெரும் பொறுப்பைப் பெற்றுள்ளதால் பல இன்னல்களுக்கு பெண் ஆளாகின்றாள்.

பெண்களைத் தாழ்வுப்படுத்தும் ஆண் தலைமை மதிப்புகளும், அதனால் விளையும் ஆண்களின் மனப்போக்கும் அதிக அளவில் மாற வேண்டியது அவசியமான ஒன்றாகும். பெண்கள் மனிதர்கள் என்று மதிக்கப்பட வேண்டும். பெண்களைத் தாழ்வு படுத்தும் சமூக மதிப்புக்களை மாற்றும் முயற்சியில் ஆண் பெண் இருபாலரும் இணைந்து செயல்பட வேண்டும்.

இந்த கட்டுரை வழிப் பெறப்பட்ட முடிவுகளைப் பின்வருமாறு காணலாம்.

- பெண்களே தங்களைப் பற்றி எழுதும் போது உண்மை அதிக உயிர்ப்போடு வெளிப்படும் வாய்ப்புண்டு.
- ஆணின் பக்கபலமின்றி தனியாக பொருளியல் தேவைகளுக்காகப் போராடும் பெண்கள் பற்றிய பதிவே அளம் நாவலாகும்.
- திருமணம் பெண்ணுக்குக் கூடுதலாக வற்புறுத்தப்படுகிறது. திருமணச்சந்தையில் பெண்ணின் மேன்மையான குணம் கண்டு கொள்ளப்படுவதேயில்லை. மாறாக அவளது தோற்றமும் செல்வமும் செல்வாக்குமே கணக்கில் கொள்ளப்பட்டு அவளது ஆசைகள் காவுகொள்ளப்படுகின்றன.
- காதல் என்ற பெயராலும் பெண்ணுக்கு மட்டுமே அவமானம் அதிகரிக்கிறது. பெண்களே அதற்குக் காரணமாகும் நடப்புச் சமூக அவலமும் நாவலில் பிரதிபலிக்கப்படுகிறது.
- குடும்ப வாழ்விலும் பெண்ணின் உடல் மட்டுமே போகப்பொருளாக ஆணால் பார்க்கப்படுகிறது. அவளது இதர தகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன.

- புகுந்த வீட்டு உறவினரின் பகையால் பெண்ணின் வாழ்வு பெரும் கேள்விக் குறியாகிறது.
- கல்வி பெண் விடுதலைக்கான கருவியாய் இந்நாவலில் பேசப்படாமைக்கு கதைச்சூழல் காரணமாயிருந்திருக்கலாம்.
- பெண்ணுக்கு முதல் திருமணமே பேரவலத்தில் அவளைச் சிக்க வைக்கும் நிலையில் இரண்டாவது திருமணம் என்பது சவாலானது மட்டுமல்ல அவளை மேலும் மேலும் துன்பவலைக்குள் பிணிப்பதாகவே அமைந்து . விடும் அவல நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

## 7. அடிக்குறிப்புகள்

[1] செ.சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும், ப.3

[2] இரா.பிரேமா, பெண் எழுத்துக்களின் அரசியல் ப.19

[3] சு.தமிழ்ச்செல்வி, அளம் ப.44

[4] மேலது., ப.246

[5] மேலது., ப.238

## 8. துணைநூற்பட்டியல்

[1] சாரதாம்பாள். செ. - பெண்ணிய உளப்பகுப்பாய்வும், பெண் எழுத்தும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, முதற்பதிப்பு 2005.

[2] தமிழ்ச்செல்வி. சு - அளம், மருதாபதிப்பகம், திருச்சி. முதற்பதிப்பு 2002.

[3] பிரேமா.இரா - பெண்எழுத்துக்களில் அரசியல், அறிவுப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2007.





# ஐசக் அருமைராசனும், வட்டார நாவல்களும்

**இ. அல்போன்சாள்**

*தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),*
*பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.*

## 1. முன்னுரை

குமரி மாவட்டத்தில் தோன்றிய இலக்கியப் படைப்பாளிகள், குறிப்பிட்ட சில பகுதிகளை இடப்பின்னணியாகக் கொண்டு அதன் வட்டார இயல்பையும் உயிரோட்டத்தையும் வெளிப்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். வெறுமனே இடப்பின்னணிகளையோ, பெயரையோ மட்டுமே இவர்கள் பதிவு செய்யாமல் அவற்றின் அடிப்படையிலான மக்கள் பண்பாட்டை வெளிப்படுத்துகிறவர்களாக விளங்குகிறார்கள். இந்த வட்டாரப் பின்புலத்தில் எழுதும் எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர் ஐசக் அருமைராசன் ஆவார்.

குமரி மாவட்டத்தில் முதன்முதலில் வெளி வந்த நாவலாக அருமைநாயகம் எழுதிய 'மீதி இருள்' என்பதைக் கூறலாம். இந் நாவல் 1898-ல் வெளிவந்தது; பழைமையானது, தமிழில் ஆரம்ப நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலுக்கு இணையான காலத்தில் தோன்றியது.

'மீதிஇருள்' நாவலில் வட்டார மொழிக்களத்தின் பின்னணி தீவிரமாக வெளிப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. குமரிமாவட்டத்திலுள்ள பேச்சுத் தமிழின் கொச்சையைப் பயன்படுத்தி இருக்கிறாரே தவிர, எந்த வட்டாரத்தைச் சார்ந்தது என்ற தகவல் அதிகமும் வெளிப்படவில்லை என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக, திருச்சிராப்பள்ளி என்று இருப்பதைத் திருச்சினாப்பள்ளி என்ற பெயரில் எழுதுகிறார்.

"ஐரோப்பாவிலிருந்து சுவிசேஷ ஒளியானது அமாவாசி இரவில் பூரணசந்திரன் உதயமானாற் போலத் தோன்றி ஜொலிக்க ஆரம்பித்தது. ஒப்பற்ற அவ்வுன்னத ஒளியை இருளின் மைந்தருள் ஏராளமானோர் ஏற்றுக்கொண்டார்கள்.... பச்சைப்புல்லை நோவ மிதித்தறியாப் பசுமைச் சுபாவியாகிய அவனுக்குப் பரிசுத்த ஒளியின் மைந்தர் என்று பேர்படைத்த பலர் புரிந்த தீமைகளைச் சொன்னால் வெட்கம், சொல்லாவிட்டால் துக்கம்".[1]
என்ற வரிகளில் காணக்கிடக்கும், அம்மாவாசி, பச்சைப் புல்லை நோவ போன்ற வார்த்தைகள் வட்டார இயல்பிற்கான எடுத்துக்காட்டுகள்.

குமரி மாவட்டத்தில் தோன்றிய வட்டார நாவலாக ஹெப்சிபா ஏசுதாசன் எழுதிய 'புத்தம் வீடு' என்ற நாவலைக் கூறலாம். இந்நூல் 1964-ம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நாவல் விளவங்கோடு வட்டாரமும், கல்குளம் வட்டாரமும் சந்திக்கும் புலிப்பனம் என்ற கிராமத்தின் பின்னணியில் உருவான கதையாகும். நாவலாசிரியர் இதனைப் பனவிளை என்று குறிப்பிடுகிறார். இந்த நாவலில் வெளிப்படும் வட்டார வழக்குக் குறித்து ஹெப்சிபா ஜேசுதாசன்,